

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் 03.12.2025 அன்று வழங்கினார்கள். உடன், அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.ராமச்சந்திரன், முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், ஓசூரில் அ.தி.மு.க. மாநகராட்சி மண்டல தலைவர் புருஷோத்தமரெட்டி, அ.தி.மு.க. ஓசூர் தெற்கு மண்டல துணைச் செயலாளர் நவீன்குமார், அ.தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட தலைவர் புருஷோத்தமன் ஆகியோரது தலைமையில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அ.தி.மு.க.வில் இருந்து விலகி உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி, கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும், ஓசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ், ஓசூர் மாநகர மேயர் சத்யா ஆகியோர் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். அவர்களுக்கு அமைச்சர் சால்வை அணிவித்து வரவேற்றார். இந்த நிகழ்ச்சிகளில் செங்குட்டுவன், முருகன், யுவராஜ், சீனிவாசன், ஆனந்தையா, மாதேஸ்வரன் உள்ளிட்ட நிர்வாகிகள், கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டத்தில்

# 4 வழித்தடங்களுக்கான 6 புதிய BS VI ரக நகரப் பேருந்துகள்!

## பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர், டிச.5–

பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் ஒன்றியத்திற்குட்பட்ட குன்னம் பேருந்து நிலையத்தில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பொதுமக்கள் பயன்பாட்டிற்காக 4 வழித்தடங்களுக்கு 6 புதிய BS VI ரக மகளிர் விடியல் பயண நகரப் பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ந.மிருணாளினி தலைமையில் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலை வகித்தார்.

பெரம்பலூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து வாலிகண்டபுரம், தொழுதூர் வழியாக லெப்பைக்குடிக் காடு வரையில் இரண்டு பேருந்துகளும், பெரம்பலூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து சித்தளி, பேரளி வழியாக குரும்பாபாளையம் வரை ஒரு பேருந்தும், பெரம்பலூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து செங்குணம் வழியாக பென்னகரம் வரை இரண்டு பேருந்துகளும், பெரம்பலூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து சிறுவாச்சூர், இலுப்பைக்குடி வழியாக சில்லக்குடி வரை ஒரு பேருந்தும் என மொத்தம் 6 புதிய BS VI ரக நகரப் பேருந்துகளை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன்,மாவட்ட வருவாய் அலுவலர் க.கண்ணன், முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் குன்னம் சி.ராஜேந்திரன், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கும்பகோணம் கோட்ட நிர்வாக இயக்குனர் க. தசரதன் ஆலத்தூர் முன்னாள் ஒன்றியக் குழுத்தலைவர் ந.கிருஷ்ணமூர்த்தி, வேப்பூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் சி.இராஜேந்திரன், திருச்சி மண்டல பொது மேலாளர் டி.சதீஷ்குமார் மற்றும் போக்குவரத்து கழக பணியாளர்கள் தொழிற்சங்க பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்ட மாநகர மீனவர் அணி சார்பாக, மீனவர் தொழிலாளர்களுக்கு சீருடை வழங்கும் விழா திருச்சி பாலக்கரை பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு வரவேற்புரை மாவட்ட தலைவர் சையத் பாபா பக்ருதீன், தலைமை மாவட்ட அமைப்பாளர் சாந்தகுமாரி சாலமன், மாநகர அமைப்பாளர் பெஞ்சமின், இவ்விழாவில் மீனவர் தொழிலாளர்களுக்கு சீருடைகள் வழங்கி திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரையாற்றினார். மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், மாநகர அவை தலைவர் நூர்கான், நன்றியுரை மாநகர மீனவர் அணி தலைவர் ஜி .ரத்தினவேல், இந்நிகழ்வில் மாவட்டத் துணைச் செயலாளர் லீலாவேலு, மூக்கன் மாநகர துணை செயலாளர் சந்திரமோகன் பகுதி கழகச் செயலாளர் டி.பி.எஸ். எஸ். ராஜ் முகமது மற்றும் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### வேப்பந்தட்டை அரசினர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும்

# 1,831 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

பெரம்பலூர், டிச. 5 –

தமிழக அரசின் திட்டங்கள் உடனடியாக பயனாளிகளுக்கு சென்று சேர வேண்டும் எனும் நோக்கில், தமிழக அரசின் முத்தான திட்டங்களும் ஒன்றான மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு தொடர் மழையிலும் 1831 மாணவ மாணவிகளுக்கு 28.11.2025, 01.12. 2025, 02.12.2025 ஆகிய மூன்று நாட்களில் ரூ.82 இலட்சத்து 94 ஆயிரத்து நானூற்று முப்பது மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகளை

பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் வழங்கினார்.

வேப்பந்தட்டை அரசினர் மேல்நிலைப்பள்ளி, வெங்கலம் அரசினர் மேல்நிலைப்பள்ளி, அரும்பாவூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி, பூலாம்பாடி அரசினர் மேல்நிலைப்பள்ளி,எபுனித தோமினிக் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, எளம்பலூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி, கவுல்பாளையம் அரசினர்மேல்நிலைப்பள்ளி, சிறுவாச்சூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி, சத்திரமனை அரசினர் மேல்நிலைப்பள்ளி, களரம்பட்டி ஆதி திராவிடர் நல மேல்நிலைப்பள்ளி, அம்மாபாளையம் அரசினர் மேல்நிலைப்பள்ளி, மேலப்புலியூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி, எசனை அரசினர் மேல்நிலைப்பள்ளி, அனுக்கூர் அரசினர் மேல்நிலைப் பள்ளி, ரஞ்சன்குடி அரசினர் மேல்நிலைப்பள்ளி, அன்னமங்கலம் சிறுமலர் மேல்நிலைப் பள்ளி, நெற்குணம் அரசினர் மேல்நிலைப்பள்ளி, கை. களத்தூர் அரசினர் மேல்நிலைப் பள்ளி, வ.களத்தூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி, செட்டிக்குளம் அரசினர் மேல்நிலைப்பள்ளி, நக்கசேலம் அரசினர் மேல்நிலைப்பள்ளி, தேனூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி,

நத்தக்காடு அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவிகள் பயன் பெறும் வகையில் இலவச மிதிவண்டிகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பெரம்பலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சுவாமி முத்தழகன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்சிறுபான்மை நல அலுவலர் சுரேஷ்குமார், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன்,மாவட்ட துணை செயலாளர்கள் டி. சி. பாஸ்கர் நூருல்ஹிதா இஸ்மாயில் மற்றும் அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


